<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்</u>

<u>மடத்துக்குளம்</u>

முன்னிலை: திரு.**R. பாக்கியராஜ், B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும்

நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ம் நாள் புதன் கிழமை

(திருவள்ளுவராண்டு 2052 ஸ்ரீபிலவ வருடம் மார்கழி மாதம் 07 ம் நாள்)

**இ.ம.எண். 207/2020**

**<u>அ.வ.எண். 146/2020</u>**

முத்துச்சாமி ... **மனுதாரர்/ வாதி**

**/ எதிர் /**

1.பழனிச்சாமி

2.மகாலட்சுமி .. **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இறுதியாக இம்மனு கடந்த 14.12.2021 ஆம் நாள் என் முன்பாக வரப்பட்டு இம்மனுவில் மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கே.இராமகிருஷ்ணன், எம்.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு . எஸ்.எஸ்.ரகுநாத், பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும் ,இதுவரை பரிசீலனையிலிருந்து வந்து ஆவணங்களை ஆராய்ந்து இன்று இந்நீதிமன்றத்தில் பின்வருமாறு வழங்கப்படும்

<u>உ த் த ர வு</u>

**1.**இந்த மனு, மனுதாரர்/ வாதியால் உ.வி.மு.ச ஆர்டர் 39 ரூல் 1 மற்றும் 2 ன் படி மனுதாரர்/வாதியின் பூமிக்கு வரும் பைப்லைனை எதிர்மனுதாரர்களோ அல்லது அவர்களின் ஆட்களோ உடைக்கவோ , அழிமாட்டம் செய்யவோ கூடாது என்றும் வாதியின் பூமிக்கு தண்ணீர் பாய்ப்பதை தடை செய்ய கூடாது எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்:</u>

அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் உடன்பிறந்த சகோதரர் ஆவார் . 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் மனைவி ஆவார் . தாவாச் சொத்துக்களும், இதர சொத்துக்களும் ஆதியில் தங்முத்து கவுண்டருக்கு கடந்த 14.09.1972 ம் தேதி பத்திர எண்.2116/1972 ன் கிரைய ஆவணப்படியும், கடந்த 20.03.1974 தேதியிட்ட பத்திர எண்.776/1974 ன் கிரைய ஆவணப்படியும் 1ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் தங்கமுத்துக் கவுண்டரும், அவருடைய சகோதரர் வேலுச்சாமிக்கவுண்டரும் சேர்ந்து கூட்டாக கடந்த 24.04.1979 ம் தேதிய உடுமலைப்பேட்டை சார்பதிவாளர் அலவலக பத்திர எண்.1023/1973 ன் படி கூட்டுக் கிரைய ஆவணப்படியும் பாத்தியப்பட்டு மேற்படி தங்கமுத்து கவுண்டர் கடந்த 01.12.2003 ம் தேதியன்று காலமான பின்னிட்டு அவரது வாரிசுகளான மனைவி கானாத்தாள் மக்கனான 1ம் மனுதாரர் முத்துசாமி , கிட்டுச்சாமி மற்றும் லட்சுமி ஆகியோருக்கு கடந்த 16.09.2009 ம் தேதிய கணியூர் சார்பதிவக பத்திர எண்.2781/2009 ன் படி பாகம் செய்து கொண்டார்கள்.

மேற்படி பாக ஆவணப்படி சி செட்யூல் சொத்துக்கள் மனுதாருக்கும் மற்றும் பி செட்யூல் சொத்துக்கள் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்டு மேற்படி 16.09.2009 தேதியிலேயே சுவாதீனம் பெற்றுக்கொண்டு அவரவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரவர்கள் அனுபவித்து வருகிறார்கள் . மனுதாருக்கு ஒதுக்கப்பட்ட சி செட்யூல் சொத்துக்கள் தான் தாவாச் சொத்துக்கள் ஆகும் . தாவாச்சொத்தில் மனுதாரரை தவிர 1ம் எதிர்மனுதாருக்கோ வேறு நபர்களுக்கோ எவ்வித பாத்திய உரிமையும் இல்லை.

தாவாச் சொத்துக்கள் க .ச.நெ.40/3 காலையிலும் க .ச 21/A1A2A நெ.காலையில் அமைந்துள்ளன. அதே போல் 1ம் எதிர்மனுதாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களம் க.ச.நெ.40/3 மற்றும் க.ச.21/A1A2A நெ.காலையிலும் அமைந்துள்ளன. க.ச 40/3 நெ.காலையிலும், க.ச.21/A1A2A நெ.காலையிலும் தனித்தனியாக கிணர்கள் உள்ளன. மேற்படி க .ச.செ.40/3 நெ.காலையில் உள்ள இரண்டு கிணறுகள்

மனுதாரருக்கும், மற்ற பங்குதாரர்களுக்கும் பாத்தியம் உள்ளது. மேற்படி கிணற்றில் 1ம் பிரதிவாதிக்கு எவ்வித பங்கு பாத்தியமும் கிடையாது .அதேபோல் க .ச.21/A1A2A நெ.காலையில் உள்ள கிணற்றிலும் வாதிக்கு விகிதாச்சார பங்கு பாத்தியம் உள்ளது . க.ச.40/3 , க.ச.21/A1A2A நெ.காலையின் உள்ள கிணர்களிலும் மனுதாரர் தனது பூமிகளுக்கு தண்ணீர் பாய்த்துக் கொள்ள ஏதவாக பைப்லைன்கள் 1ம் எதிர்மனுதாரரின் பங்கு சொத்துக்களில் விடப்பட்டுள்ள பொது வண்டிப்பாதை மற்றும் பூமிகளின் அடியில் மேற்படி பாக சாசனத்தின் கண்டுள்ளவாறு போடப்பட்டுள்ளன.

1ம் எதிர்மனுவாதியானவர் தனக்கு பாத்தியப்பட்ட க.ச.21/A1A2A காலையில் உள்ள கிணற்றில் இருந்து , க.ச. நெ.40/3 நெ.காலைக்கு தண்ணீர் பாய்த்துக் கொள்ளும் விதமாக 1ம் எதிர்மனுதாரரின் பங்கு செத்தில் விடப்பட்டுள்ள பொது வண்டிப்பாதை மற்றும் பூமியின் அடியில் பைப்லைன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரருக்கு ஒதுக்கப்பட்ட பொது தடமானது ஒரு சில இடங்களில் 6 அடி அகலத்திலும், ஒரு சில இடங்களில் 10 அடி அகலத்திலும் உள்ளது. மனுதாரரின் பூமி வழியாகவும் மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரரின் பூமிகளுக்கு பைப்லைன்கள் அமைத்து அவரவர் பூமிகளுக்கு தண்ணீர் பாய்சி வருகிறார்கள்.

மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் ஏற்பட்ட மனவிரோதம் காரணமாக எதிர்மனுதாரர் கடந்த 01.09.2020 ம் தேதியன்று இரவோடு இரவாக டிராக்டர் மூலமாக க.ச.21/A1A2A நெ.காலையில் உள்ள மனுதாரருக்கும் , 1ம் எதிர்மனுதாரருக்கும் பொதுவாக பாத்தியப்பட்ட பொது தடத்தை டிராக்டர் மூலம் அழித்து மேற்படி பொதுத்தட பூமியையும் 1ம் எதிர்மனுதாரர் தனது பூமியுடன் சேர்த்து உழவு செய்து கொண்டார் . மேற்படி தடத்தின் வழியாகத்தான் மனுதாரர் தன் பூமிகளை சென்றடைந்தும் , மற்றும் க.ச.நெ.40/3 காலையில் உள்ள தன் வீட்டிற்கு சென்றடைந்து அனுபவித்து வருகிறார். மேற்படி தடத்தை விட்டால் மனுதாரருக்கு வேறு தடம் இல்லை.

எதிர்மனுதாரர் மனுதாரர் பூமிக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக அமைக்கப்பட்டுள்ள க.ச.21/A1A2A மற்றும் க .ச.நெ.40/3 நெ.கலையில் உள்ள பைப்லைனை உடைப்பதற்கு 2 ம் எதிர்மனுவாதியுடன் கைகோர்த்துக்கொண்டு கடந்த 04.09.2020 ம் தேதியன்று அடியாட்களுடன் வந்து எத்தனித்ததை மனுதாரர் பெரும் சிரமத்துடன் தடை செய்துள்ளார் . எதிர்மனுதாரர்கள் மேற்படி பைப்லைனை உடைக்காமல் விடப்போவதில்லை என்று பசாரித்து சென்றுள்ளனர் . மேற்படி பைப்லைனை எதிர்மனுதாரர்கள் உடைக்கும் பட்சம் மனுதாரர் தாவாச் சொத்துக்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாத சூழ்நிலை ஏற்பட்டு மனுதாரருக்கு குடிநீருக்கே வழியில்லாமல் போய்விடும் . எனவே மனுதாரர்/வாதியின் பூமிக்கு வரும் பைப்லைனை எதிர்மனுதாரர்களோ அல்லது அவர்களின் ஆட்களோ உடைக்கவோ , அழிமாட்டம் செய்யவோ கூடாது என்றும் வாதியின் பூமிக்கு தண்ணீர் பாய்ப்பதை தடை செய்ய கூடாது எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை இந்த மனுவின் எதிருரையாக தாக்கல் செய்யப்பட்டு எதிருரையின் சுருக்கம்.</u>

2 ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1 ம் எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

மனுதாரரின் மனு பொய்யானது . சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்கள் வெளிப்படையாய் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை ஆகும்.

மேற்படி சொத்துக்களை பாகபாத்தியத்தில் அனுபவித்து வருவது என்று சொல்லியுள்ள சங்கதி பொய்யாகும். மேற்படி பாகபத்திரத்தில் மனுதாரர் ஒரு தரப்பினர் அல்ல. மேற்படி பாகபத்திரத்தில் உள்ள சொத்துக்களை விலைக்கு வாங்கிய பிரதிவாதிக்கும் தாவா வண்டித்தடம் மற்றும் கிணறு பாத்தியம் ஆகும் . மனுதாரர் தனக்கு S.F.No.21/A1A2A காலையில் உள்ள கிணறு தனக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளது பொய் ஆகும். இப்பிரதிவாதி S.F.No.21/A1A2 காலையில் 0.50 செண்ட்

நிலத்தை வாங்கியுள்ளார். அந்த நிலம் தற்போது 08.04.1996 தேதியிட்ட பத்திர எண்.472/1996 ன் S.F.No.21/A1A2A ஆக சப்டிவிஷன் செய்யப்பட்டுள்ளது. அந்த காலையில் உள்ள கிணறு பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது ஆகும். மேற்படி காலையில் உள்ள கிணறு மனுதாரருக்கும் பாத்தியம் என்று சொல்வது பொய் ஆகும் . எனவே பிரதிவாதியின் அனுமதி இல்லாமல் பிரதிவாதியின் பூமியில் எந்த பைப்லைனும் போடக்கூடாது. மேற்படி மனுதாரர் பிரதிவாதியின் அனுமதி இல்லாமல் பைப்லைனை போட முயற்சி செய்ததை பிரதிவாதி தடுத்துள்ளார் . பிரதிவாதி அது போல் எந்த அனுமதியும் மனுதாரருக்கு அளிக்கவில்லை . தாவா வண்டித்தடம் மற்றும் கிணறு தொடர்பாக மனுதாரரிடம் கேட்ட போது தனக்கு எந்த விவரம் பாகபத்திரத்தில் தெரியவில்லை என்றும் தரப்பினர் மேல் உள்ள நம்பிக்கையில் ஆவணங்களில் கையொப்பம் செய்ததாக தெரிவித்தார். கையொப்பம் செய்யும் முன்பு ஆவணத்தை பார்க்கவில்லை என்றும் தெரிவித்தார். மனுதாரர் S.F.No.21/A1A2A காலையில் உள்ள கிணற்றில் தண்ணீரை தனது பூமிக்கு எடுக்கிறார் என்பது பொய் மற்றும் வண்டித்தடத்தில் பைப்லைன் எடுப்பதாக சொல்வதும் பொய் ஆகும் .பாகப்பத்தில் வண்டித்தடம் மற்றும் S.F.No.21/A1A2A காலையில் இருந்து கிணற்று எடுத்துக்கொள்வது என்பது இல்லை. மனுதாரர் தவறான விவரங்கள் சொல்லி புதிதாக ஒரு ஆவணம் உருவாக்க பார்க்கிறார். பிரதிவாதியின் பூமி S.F.No.21/A1A2A ல் உள்ளது என்பதை தவிர மனுதாரர் சொல்லிய அனைத்து விவரங்களும் பொய் ஆகும்.

மனுதாரர் பிரதிவாதியின் வண்டித்தடத்தை ஒருபோதும் பயன்படுத்தியது இல்லை. மனுதாரர் வேறு ஒரு வண்டித்தடத்தை உபயோகித்து தனது பூமிக்கு செல்கிறார். அவ்வாறு உண்மையாக பிரதிவாதிகள் பைப்லைனை உடைத்திருந்தால் மனுதாரர் காவல் நிலையத்திற்கு சென்றிருப்பார் எனவே மனுதாரர் சொல்வது பொய் ஆகும். எனவே மனுதாரர் பொய்ய சங்கதிகளை கூறி பாக பத்திரத்தில இல்லாத விவரங்களை கூறி ஒரு ஆவணத்தை உருவாக்க பார்க்கிறார். எனவே மேற்சொன்ன பாக பத்திரத்தில் இல்லாதவை பிரதிவாதியை கட்டுப்படுத்தாது . மேலும் தாவாவிற்கு வழக்கு மூலம் இல்லாததால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்பபடவில்லை சான்றாவனங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>இம்மனுவில் கீழ்க்கண்ட பிரச்சனையை தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளது.</u>

மனுதாரர்/வாதி கோரி இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

6. <u>தீர்வு :–</u>

இருதரப்பு வாதமும் கருத்தில் கொள்ளப்பட்டது. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை. ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

மனுதாரர்/ வாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாத உரையில் தாவா சொத்துக்கள் விவசாய பூமி என்றும் அசல் வழக்கானது பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா பூமியும் மற்றும் இதர சொத்துக்களும் வாதி மற்றும் பிரதிவாதியின் தகப்பனார் அவருக்கு 14.09.1972 தேதியிட்ட 2116/1972 பத்திரப்படி பாத்தியப்பட்டும் மனுதாரர் மற்றும் அவருடைய சகோதரருக்கும் கூட்டாக 20.03.1974 தேதியிட்ட 776/1974 பத்திரப்படி பாத்தியப்பட்டு தாவா சொத்துக்கள் வாதிகளின் தந்தை உயிருடன் இருக்கும்வரை அவரது அனுபவத்தில் கூட்டாக இருந்தது என்றும் வாதியும் மட்டும் 1ம் பிரதிவாதியின் தந்தை தங்க முத்து கவுண்டர் 01.12.2003 ஆம் தேதி இறந்துவிட்டார் என்றும் அதற்கு பின்னிட்டு கடந்த 16.09.2009 ஆம் தேதி அன்று வாதி மற்றும் பிரதிவாதி மற்றும் இவரது சகோதர சகோதரிகள் சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றும் , பாகப் பத்திரத்தில் உள்ள சி ஷெட்யூல் சொத்து மனுதாரருக்கு ஒதுக்கப்பட்டது என்றும் பி ஷெட்யூல் சொத்து பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டது என்றும், அது முதல் அவரவர் சுவாதீனத்தில் வைத்து வருவதாகவும் க .சா.நெ. 40/3 காலையில் S.F.No.21/A1A2A காலையில் அமைந்துள்ளது என்றும் அதே போல் 1ம் எதிர் மனுதாரருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களும் க.ச.நெ.40/3 மற்றும் க.ச.21/A1A2A நெ.காலையிலும் அமைந்துள்ளன க.ச.40/3 நெ.காலையிலும் க.ச..21/A1A2A நெ.காலையிலும் தனித்தனியாக கிணறு

உள்ளது என்றும் கா.ச. 43 ம் நம்பர் காலையில் உள்ள கிணறு இரண்டு மனுதாரருக்கும் மற்ற பங்குதாரர்களுக்கும் பாத்தியம் உள்ளது என்றும் , 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியம் இல்லை என்றும் , அதே போல் தான் க .ச.நெ. 21 காலையில் உள்ள கிணற்றிலும் விகிதாச்சாரம் உள்ளது என்றும் க.ச.40/3, க.ச.21/A1A2A கிணறுகளிலும் தண்ணீர் பாய்ச்சும் பாத்தியம் உண்டு என்றும் வாதியின் பூமிக்கு பிரதிவாதியின் பூமியின் அடியில் பைப்லைன் அமைத்து தண்ணீர் பாய்ச்சி வருவதாகவும் பிரதிவாதியின் பூமியில் பொதுப்பாதை விடப்பட்டுள்ளது என்றும் அந்த பொதுப் பாதையில் சென்று தான் அனைவரும் அவரது பூமிகளை அனுபவித்து வருவதாகவும் பாதை சில இடங்களில் 6 அடி என்றும், சில இடங்களில் 10 அடி அகலத்தில் உள்ளது என்றும், அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட கா.ச.நெ. 40/3 என்ற எண்ணிற்கு க.ச.நெ. 21/A1A2A காலையின் வழியாக வாதி பூமிக்கு பைப்லைன் வழியாக தண்ணீர் பாய்ச்சி கொள்வதற்காக பைப்லைன் அமைக்கப்பட்டுள்ளது என்றும் பிரதிவாதியின் மீது ஏற்பட்ட மனவிரோதம் காரணமாக கடந்த 1.09.2020 ஆம் தேதி வாதிக்கு தெரியாமல் இரவோடு இரவாக பாதையை டிராக்டர் கொண்டு அழித்து வயலாக மாற்றி விட்டார் என்றும் , அதனால் பொது வண்டிப் பாதையில் சென்று அவரது பூமியை அனுபவம் செய்ய முடியவில்லை என்றும் தாவாவில் குறிப்பிட்டுள்ள பொதுப் பாதையை தவிர வேறு பாதை இல்லை என்றும் கடந்த 04.09.2020 ஆம் தேதி 1ம் பிரதிவாதி அடியாட்களுடன் வந்து க.ச.நெ. 21/A1A2A நெ. காலையில் அமைந்துள்ள பைப்பினை உடைக்க முயற்சி செய்ததாகவும், அதனால் தாவா முடியும்வரை பைப்பை உடைக்கக் கூடாது என்று எதிர்மனுதாரர் அதற்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்க வேண்டும் என்று கூறினார்

பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையே இந்த மனுவிற்கு எதிருரையாக பாவிக்க வேண்டி குறிப்புரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 17.12.2021 அன்று வாதிகள் தரப்பில் வாதம் செய்யப்பட்டது பிரதிவாதிகள் தரப்பில் யாரும் வாதம் செய்யவில்லை . 25.11.2021 அன்று பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி வாதம் செய்யவில்லை அதனால்

வரும் 13.12.2021க்குள் எழுத்து மூலமான வாதத்தை தாக்கல் செய்ய உரிமை அளித்து வாய்ப்பு வழங்கப்பட்டது . ஆனால் எழுத்து மூலமான வாதுரை பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை . மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் விசாரிக்கப்படவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யவில்லை எதிர் மனுதாரர் தரப்பில் எதிர் வழக்குரை கூறிய சங்கதிகள் மட்டும் கருத்தில் கொள்ளப்பட்டது வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையில் பாக பிரிவினைபடி தரப்பினர்கள் சொத்துக்களை ஆண்டு அனுபவித்து வருவதாக சொல்லப்பட்டுள்ளது பொய் என்றும் இந்த பிரதிவாதி சில நாட்களுக்கு முன்பாக தான் பாக பத்திரத்தை பார்வையிட்டார் என்றும் குறிப்பாக பத்திரத்தில் பொதுப் பாதை மற்றும் பைப்லைன் உள்ளதை பார்த்து அதிர்ச்சி அடைந்தார் என்றும் இந்த 1ம் பிரதிவாதியால் வாங்கப்பட்ட பூமியில் பாதையும் , பைப்லைனும், போட்டுள்ளதாகவும், அது பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றும் பிரதிவாதியின் சம்மதம் இல்லாமல் பாக பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் கா .சா.நெ. க.ச.21/A1A2A இல் உள்ள கிணற்றில் பாத்தியம் இல்லை என்றும் அதை பிரதிவாதி வாங்கினார் என்றும் இன்னும் பிரதிவாதி பாக பத்திரத்தில் தரப்பினர் இல்லை என்றும் வாதி க.ச.21/A1A2A இல் இருந்து க.ச.நெ.40/3 என்ற எண்ணிற்கு தண்ணீர் பாய்ச்சிக்கொள்வதாக வழக்கில் கூறியது போல் நடைமுறையில் இல்லை என்றும் பாக பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாதை மற்றும் பைப்லைன் இல்லை என்றும் 01.09.2021 பிரதிவாதிகள் பாதையை அழிக்கவில்லை என்றும் வாதிக்கு வேறு பாதை உள்ளது என்றும் பாதை அழித்திருந்தால் வாதி முதலில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து இருப்பார் என்றும் வாதி இல்லாத பாதையை உருவாக்க முயற்சி செய்கிறார் என்றும் அதனால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது . வாதிகள் தரப்பில் பாதை பிரதிவாதியால் அழிக்கப்பட்டுள்ளது என்றும் அதற்காக செயல் உறுத்துக்கட்டளை கூறப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது . தற்பொழுது பாதை இருப்பதாக குறிப்பிடவில்லை. வாதிகள் தரப்பில் பிரதிவாதியின் பூமி வழியாக வாதிகளின் பூமிக்கு தண்ணீர் கொண்டு செல்ல பைப்லைன் அமைக்கப்பட்டுள்ளது என்ற வாதத்தை கருத்தில் கொள்ளும் போது பைப்லைன் இருப்பதற்கான எந்த ஆதாரமும் வாதி தரப்பில்

குறியீடு செய்யவில்லை. தற்போது இந்த இடை மனுவில் பிரதிவாதிகளின் பூமி வழியாக பைப் லைன் உள்ளதா இல்லையா என்று முடிவெடுக்க முடியாது . அசல் வழக்கின் இறுதியில்தான் சாட்சியங்களை விசாரணை செய்து ஆவணங்களை ஆய்வு செய்து இறுதியில் தான் தீர்மானிக்க முடியும் மேற்கண்ட காரணங்களால் வாதி கோரிய இடைக்கால உறுத்து கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று மனு தள்ளுபடி செய்யத்தக்க மனு என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. இம்மனுவில் செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு , அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ம் நாள் என்னால், திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

**ஒப்பம்/–திரு.R. பாக்கியராஜ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல்**
**மற்றும் நீதித்துறை நடுவர்**
**மடத்துக்குளம்.**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்**

இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்**

இல்லை.

**ஒப்பம்/–திரு.R. பாக்கியராஜ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல்**
**மற்றும் நீதித்துறை நடுவர்**
**மடத்துக்குளம்.**

**இ.ம.எண். 207/2020**
**<u>அ.வ.எண். 146/2020</u>**
**நாள் – 22.12.2021**
**<u>உத்தரவு அவையறிய</u>**
**<u>பகரப்பட்டது</u>.**

இறுதியாக இம்மனு

தள்ளுபடி செய்து

உத்தரவிடப்படுகிறது.

இம்மனுவில்

செலவுத் தொகை இல்லை.

**மாவட்ட உரிமையியல்**
**மற்றும் நீதித்துறை நடுவர்**
**மடத்துக்குளம்**

IA.No.207/2021 OS.No.146/2020 22.12.2021